# பொன் வித்யாஷ்ரம் பள்ளி - வளசரவாக்கம் -2017-18
# தமிழ் - இரண்டாம் மொழி
# பயிற்சி வினாத்தாள்
# முதல் பருவத் தேர்வு

**வகுப்பு :VIII**

## I. செய்யுள் வினாக்கள்:

1. இறைவன் எவ்வாறெல்லாம் விளங்குவதாய்த் தாயுமானவர் குறிப்பிடுகிறார்?
2. தாயுமானவர் - ஆசிரியர் குறிப்பு வரைக.
3. வாழ்த்து - நூற்குறிப்பு தருக.
4. ‘புணர்ச்சி பழகுதல் வேண்டா’ என வள்ளுவர் கூறுவது ஏன்?
5. பாரதியும் பாரதிதாசனும் திருவள்ளுவரை எவ்வாறு சிறப்பித்துள்ளனார்?
6. நட்பின் இலக்கணம் யாது?
7. பூதஞ்சேந்தனார் - குறிப்பு வரைக.
8. எவையெல்லாம் இனிமை பயக்குமெனப் பூதஞ்சேந்தனார் கூறுகிறார்?
9. கவிஞர் சச்சிதானந்தனின் தமிழ்ப்பற்றினை விளக்குக.
10. தினையளவு எனத் தொடங்கும் பாடலில் பயின்று வரும் உவமையை விளக்குக.
11. திருக்குறளின் பெருமையைக் கபிலர் எவ்வாறு விளக்குகிறார்?
12. தமிழ்ப்பசி - நூல் குறிப்பு தருக..

## II. உரைநடைப் பகுதி வினாக்கள்:

1. தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர் பெயர்களை எழுதுக.
2. வீரமாமுனிவர் குறித்து ரா.பி சேதுப்பிள்ளை கூறியது யாது?
3. ஆறுமுக நாவலர் பதிப்பித்த நூல்கள் யாவை?
4. செய்திக்களம் என்பது யாது? சான்று தருக.
5. செய்திக்களம் பெறும் வாயில்கள் யாவை?
6. செய்தி திரட்டுவதில் உள்ள பொதுவான முறைகள் யாவை?
7. ‘வையக விரிவு வலை’ குறிப்பு வரைக.
8. இணையதள வசதியைப் பெறத் தேவையான பொருட்கள் யாவை?
9. இணையம் - குறிப்பு வரைக.
10. கணினியின் பயன்களை குறிப்பிடுக.

III. **துணைப்பாட வினாக்கள்**:

கீழ்க்காணும் துணைப்பாட தலைப்புகளில் எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி.(கட்டுரை வடிவில்)

1. ஜி.யு. போப்
2. மகிழ்ச்சிக்கான வழி.
3. ஆவணம்.

IV. **இலக்கண வினாக்கள்**:

1. குற்றியலுகரத்தின் வகைகள் யாவை? சான்றுகள் தருக.
2. முற்றியலுகரம் என்றால் என்ன? சான்று தருக.
3. குற்றியலிகரம் என்றால் என்ன? உதாரணம் தருக.
4. திசைச் சொல் என்றால் என்ன? சான்று தருக.
5. திரிசொல் என்றால் என்ன? எ.கா.தருக.
6. இலக்கிய வகையால் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
7. வழக்கு என்றால் என்ன?
8. மரூஉ என்பது யாது? சான்று தருக.
9. இலக்கணப் போலியைச் சான்றுடன் விளக்குக.
10. இயற்சொல் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?

**V. கடிதப் பகுதி:**

நன்றிக் கடிதம்

(உன் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு பரிசு வழங்கிய நண்பனுக்கு நன்றி கூறி கடிதம்)